**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு. எம். சண்முககனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை**
**இடைக்கால மனு எண்.6/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.142/2019**

ரத்னகுமார் ...மனுதாரர்/2 ம் பிரதிவாதி

..எதிர்..

1.வள்ளி ....1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2.பொன்னம்மாள்(இறப்பு)
3.விஜயா
4.ஐஸ்வர்யரத்னா
5.ஜெயசித்ரா (எ) அலமேலு
6.விக்னேஷ்மாதவன்
7.ரூபா
8.குழந்தைச்சாமி
9.மலைச்சாமி
10.பாண்டியலெட்சுமி
..3 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 10 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 04.09.2024–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J.P. நல்லையன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்திரு. V. அக்கினிராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான.

**உத்திரவு**

இம்மனுவானது, மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் தாவா வழக்கினை பிரதிவாதி வாதி தரப்பு விசாரணைக்காக Reopen செய்ய உத்திரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இந்த மனுதார் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும் 1ம் எதிர்மனுதார் அசல் வழக்கை பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும் அசல் வழக்கில் பி.வா.சா 1 சாட்சியம் 27.03.2024 ல் முடிவுற்றது என்றும் பி.வா.சா 1 குறுக்கு விசாணையின் போது தாவா 9 வது இலக்க சொத்தை பொறுத்து கேள்விகள் கேட்கப்பட்டது என்றும் அப்போது பி.வா.சா 1 2ம் பிரதிவாதியின் தகப்பனாரின் பாட்டியான கொசுவாயி என்பவர் பெயரில் 9 வது லக்க சொத்தை பொறுத்து உள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் தற்போது இந்த மனுதாரருக்கு கொசுவாயி பெயரில் 14.08.1931 , 17.08.1931 மற்றும் 17.11.1938 ஆகிய தேதிகளில் உள்ள கிரைய ஆவணங்கள் கிடைக்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்படி மூல ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் எனவே அசல் வழக்கை பி.வா.சா 1 சாட்சியத்திற்க்காக மறுதிறப்பு செய்து உத்திரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்

வழக்குரையில் தாவா 9 வது இலக்க சொத்து மனுதாரரின் தகப்பனாரின் பாட்டி கொசுவாயி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் மேற்படி கொசுவாயி பெயரில் 14.08.1931 , 17.08.1931 மற்றும் 17.11.1938 ஆகிய தேதிகளில் கிரையப்பத்திரங்கள் உள்ளது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றும் அது போல 2 ம் பிரதிவாதியின் நிரூபண வாக்குமூலத்திலும் மேற்படி கொசுவாயி பற்றியோ அவர் பெயரில் உள்ள கிரைய பத்திரங்கள் பற்றியோ சொல்லப்படவில்லை என்றும் இந்த மனுதாரர் தனது எதிர்வழக்குரையில் 19.06.1969 விடுதலை பத்திரத்திற்கு முந்தைய ஆவணங்களை மறைத்தும், மறுத்தும் சொல்லியுள்ள நிலையில் தற்போது கொசுவாயி பற்றியும் அவர் சம்மந்தமான 1931 மற்றும் 1938 கிரைய பத்திரங்கள் பற்றி சொல்லியுள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும் தாவா 9 வது லக்க சொத்து கொசுவாயி என்பவருக்கு பாத்தியமான சொத்து என்று எதிர்வழக்குரையில் சொல்லப்படாத நிலையில் தற்போது தாவா 9 வது இலக்க சொத்து கொசுவாயிக்கு பாத்தியப்பட்டது என்றும் அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4) 3 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:**

அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி தரப்பில் பல வாய்தாக்கள் பெற்று வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் தாக்கல் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பு 1931 மற்றும் 1938 வருட ஆவணங்களை தாக்கல் செய்ய அசல் வழக்கினை மறுதிறப்பு செய்ய வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு விசாரணையை காலம் கடத்திட இந்த மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும் தற்போது தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரர் கூறியுள்ள ஆவணங்கள் அசல் வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்கள் என்றும் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் பி.வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது தாவா 9வது இலக்க சொத்தை பொறுத்து கேள்விகள் கேட்கப்பட்டது என்றும் அப்போது பி.வா.சா.1, 2ம் பிரதிவாதியின் தகப்பனாரின் பாட்டியான கொசுவாயி என்பவர் பெயரில் 9வது இலக்க சொத்தை பொறுத்து உள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் தற்போது இந்த மனுதாரருக்கு கொசுவாயி பெயரில் 14.08.1931 , 17.08.1931 மற்றும் 17.11.1938 ஆகிய தேதிகளில் உள்ள கிரைய ஆவணங்கள் கிடைக்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்படி ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்ய பி.வா.சா.1 சாட்சியத்தை மறுதிறப்பு செய்து உத்திரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா 9வது இலக்க சொத்து மனுதாரரின் தகப்பனாரின் பாட்டி கொசுவாயி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் மேற்படி கொசுவாயி பெயரில் 14.08.1931 , 17.08.1931 மற்றும் 17.11.1938 ஆகிய தேதிகளில் கிரையப்பத்திரங்கள் உள்ளது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றும் அது போல 2ம் பிரதிவாதியின் நிரூபண வாக்குமூலத்திலும் மேற்படி கொசுவாயி பற்றியோ அவர் பெயரில் உள்ள கிரைய பத்திரங்கள் பற்றியோ சொல்லப்படவில்லை என்றும் தாவா 9வது லக்க சொத்து கொசுவாயி என்பவருக்கு பாத்தியமான சொத்து என்று எதிர்வழக்குரையில் சொல்லப்படாத நிலையில் தற்போது தாவா 9வது இலக்க சொத்து

கொசுவாயிக்கு பாத்தியப்பட்டது என்றும் அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. 3 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி தரப்பில் பல வாய்தாக்கள் பெற்று வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் தாக்கல் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பு 1931 மற்றும் 1938 வருட ஆவணங்களை தாக்கல் செய்ய அசல் வழக்கினை மறுதிறப்பு செய்ய வேண்டும் என கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது இந்த மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி கொசுவாயி என்பவர் பெயரில் 1931 மற்றும் 1938 ஆண்டுகளில் உள்ள ஆவணங்களை பற்றி சொல்லப்படவில்லை என்ற போதிலும் இந்த வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது தாவா 9வது இலக்க சொத்தைப் பொறுத்து பி.வா.சா.1 சாட்சியிடம் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தாவா 9வது இலக்க சொத்து சம்மந்தமான முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி தாவா 9வது இலக்க சொத்து சம்மந்தமான முந்தைய ஆவணங்களை அசல் வழக்கில் தாக்கல் செய்வதால் அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த மனுவை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்றால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

சார்பு நீதிபதி,
மானாமதுரை.